THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon Minister whether any survey had been made to ascertain the number of physically handicapped persons in Tamil Nadu and if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. கே. என். [illegible] : உடல் ஊனமுற்றவர்களுக்காகத் தனியாகத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தப்போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தனியார் துறையில் உள்ளவர்களுக்கும் உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்த சட்டம் செய்யப்படுமா ? இதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி ஒரு யோசனையை மத்திய அரசாங்கத்திற்குச் சொன்னோம். அவர்கள்தான் சட்டம் கொண்டுவர வேண்டும். அவர்கள் அப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டுவர முன்வரவில்லை. இப்போது உடல் ஊனமுற்றவர்கள் தவிர, மற்றவர்களுக்கே வேலையில்லாத் திண்டாட்டம் ஏராளமாக இருக்கிறது. ஆகவே, கட்டாயப்படுத்த முடியாது என்று மத்திய அரசு சொல்லி வருகிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சு மூலமாக உடல் ஊனமுற்றவர்களுக்கு எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. எஸ். [illegible]ல் : உடல் ஊனமுற்றோருக்கு நமது அரசு வேலை வாய்ப்பு தேடித் தருகிற அளவிற்கு சிறு தொழிற்சாலைகள் ஆரம்பிக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது கிடைக்கிற வரையில் இப்போது வறுமையில் உழல்பவர்களுக்கு ஏதேனும் உதவித் தொகை அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

THIRU K. M. SUBRAMANIAM : Is there any separate employment Officer in the Employment Exchanges for recommending physically deformed people for employment to various Offices?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி தனிப்பட்ட கவனம் இவர்கள் மீது செலுத்தப்படுவதற்காக இப்போதே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது

1974 மார்ச் 6]

திரு. தா. சோனையா : உடல் ஊனமுற்றோர் படித்து, எஸ்.எஸ்.எல்.ஸி.-க்கு மேல் படித்திருப்பவர்களுக்கு அரசாங்க அலுவலகங்களில் உத்தியோகங்கள் வழங்குகிற நேரத்தில் அவர்களுக்கு ஏதாவது முன் உரிமை வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்களுக்கு அப்படிப்பட்ட தொழில்களைச் செய்ய முடியும் என்றிருந்தால் அவர்களுக்கு என்று தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்பதை நம் எம்ப்ளாய்மெண்ட் டைரக்டரேட் வலியுறுத்தி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 287-ம், 288-ம் அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.

நீலகிரியிலுள்ள வனத்துறை நிலங்கள் ஒப்படை.

* 289 வினா.—திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

நீலகிரி மாவட்டத்தில் விவசாயத்திற்கேற்ப உள்ள காட்டு நிலங்களை ஏழை அரிசனங்களுக்கும் நிலமில்லாத மலைவாசிகளுக்கும் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை.

திரு. கு. அ. பொம்மன் : ஏற்கனவே ஹரிஜனங்கள், மலைவாசிகள் காட்டு நிலங்களைக் கையடக்கம் செய்திருக்கிறார்கள். அவற்றையாவது அவர்களுக்கு ஒப்படை செய்வதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : கொடுக்கக் கூடிய அளவிற்கு இருந்த 364 ஏக்கர் நிலங்கள் குமரி சாகுபடிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. விநியோகிக்கிற அளவிற்கு இப்போது காட்டு நிலம் அங்கு கிடையாது.

திரு. ஆ. பரந்தாமன் : தமிழ்நாட்டில் சில பகுதிகளில் காட்டு நிலங்களை ஆக்கிரமணம் செய்துகொண்டு சில விவசாயிகள் பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கப்படவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட நிலங்களை எல்லாம் முழுதும் சர்வே செய்து, அவற்றை டி-நோட்டிபை செய்து அவர்களுக்கெல்லாம் பட்டா வழங்குவதற்கான விரிவான யோசனையை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஆக்கிரமிப்பு நிலங்களை, ஆட்சேபனை இல்லாமல் இருக்குமானால், ஆர்ஜிதம் செய்து கொடுக்கலாம்.

திரு. எம். தேவராசன் : தமிழ்நாட்டில் காட்டு நிலங்கள் இருக்க வேண்டிய அளவிற்கு இல்லை என்பது உண்மை. ஆகவே, அதை அதிகப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது ?